25/10/2018 D.V.C.No. 1/2017 P.W.2 Sakthivel

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் மனுதாரர் எனது மகள். அவருக்கும் எதிர்மனுதாரருக்கும் 09.09.2014ம் தேதி முசிறியில் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமண செலவை எதிர்மனுதாரரின் தகப்பனார் தான் செய்தார் என்றால் சரியல்ல, நானும் செய்தேன். நான் 40,000/- ரூபாய் சங்கரிடம் கொடுத்தேன். நான் கொடுக்கும்போது பேங்கில் சில நபர்கள் இருந்தார்கள். அவர்கள் யார் என்று தெரியாது. துபாயில் நடந்த விசயங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனதுமகள் மூலமாகத் தான் தெரியும். திருமணம் முடிந்து துபாய் சென்று ஐந்து மாதங்கள் இருந்தார்கள். கர்ப்பமானதற்கு பிறகு இந்தியா வந்துவிட்டார் என்றால் சரிதான். துபாயிலிருந்து திரும்பியதும் எதிர்மனுதாரர் வீட்டிற்கு தான் மனுதாரர் சென்றார் என்றால் சரிதான். பிரசவ செலவிற்கு 2,00,000/- ரூபாய் கேட்டதாக எனது மகள் சொல்லி தான் எனக்கு தெரியும். கர்ப்பமான பிறகு துபாயின் தட்ப வெப்ப நிலை எனது மகளுக்கு ஒத்துக் கொள்ளாததால் அவர் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வீட்டில் மனுதாரரை மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் நானும் உடன் சென்றேன். எங்கள் வீட்டில் வளைகாப்பு நடந்தது. எதிர்மனுதாரர் வீட்டில் நடத்த ஒத்துக் கொள்ளாததால் எங்கள் வீட்டில் நடத்தினோம். வளைகாப்புக்கு முன்பு எனது மகளை எனது வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டேன் என்றால் சரிதான். ஜாதகம் பார்த்து தான் திருமணம் முடித்தோம். ஜாதகப்பிரகாரம் எனது மகளின் நட்சத்திரம் என்ன என்றால் எனக்கு ஞாபகமில்லை. எனது மகளின் ஜாதகத்தில் எதிர்மனுதாரரின் தகப்பனார் கேட்டபோது எனது மகளுக்கு கும்பராசி என்றும் பூரட்டாதி நட்சத்திரம் என்று ஜாதகம் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த ஜாதகத்தை பார்த்து அது உண்மையான ஜாதகம் என்று பொருந்திப் பார்த்து திருமணம் முடித்தார்கள் என்றால் சரிதான். முசிறியில் தேவசேனா என்று ஒரு திருமண மையம் இருக்கிறது என்றால் அது பற்றி தெரியாது. எதிர்மனுதாரரின் தகப்பனார் எதேச்சையாக ஒரு நாள் அந்த திருமண மையத்தில் பார்த்தபோது நான் கொடுத்த எனது மகளின் ஜாதகம் இருந்தது என்றும், அதன்படி அவருக்கு தனுசு ராசி, மூல நட்சத்திரம் என்றும் இருந்தது என்றால் நான் அங்கு ஜாதகம் கொடுத்ததில்லை. அது பற்றி என்னிடம் கேட்டபோது அதான் திருமணம் முடிந்துவிட்டதே பார்த்துக் கொள்ளலாம் என்று நான் சொன்னேன் என்றால் சரியல்ல. மூல நட்சத்திரம் உள்ள பெண்ணை திருமணம் முடித்தால் அந்த பெண்ணின் மாமனார், மாமியார் உயிரோடு இருக்க மாட்டார்கள் என்பது ஐதீகம் என்றால் சரியல்ல. அதனால் மூல நட்சத்திரம் உள்ள பெண்களை மாமனார், மாமியார் இல்லாத வீட்டில் தான் திருமணம் செய்து கொடுப்பார்கள் என்றும், நான் அதை மறைத்து திருமணம் செய்து கொடுத்துவிட்டேன் என்றால் அவரிடம் ஜாதகம் பற்றி பேசவே இல்லை. இன்று வரை எதிர்மனுதாரரின் பெற்றோர் இதனால் கவலையில் இருக்கிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னை திட்டுவதாக எனது மகள் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றும், என்னை நேரடியாக யாரும் திட்டவில்லை என்றும் சொன்னால் சரிதான். எதிர்மனுதாரர் தனது பிறந்த நாளுக்கு வாழ்த்து சொல்லவில்லை என்று நான் திட்டியதாக நான் சொல்லவில்லை. எனது மகள் இந்தியா வந்தபிறகு எனது மருமகன் அவருடன் செல்போனில் பேசிக் கொண்டிருந்தார் என்றால் அது பற்றி எனது மகளிடம் தான் கேட்கவேண்டும். எனது மகளுக்கு எனது வீட்டில் வளைகாப்பு வைத்தேன். அதற்கு எதிர்மனுதாரரையோ அவரது பெற்றோர்களையோ அழைத்தேன் என்றால் ஏற்கனவே அவர்களை அழைத்தேன், வளைகாப்புக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை என்று சொல்லிவிட்டார்கள். வளைகாப்புக்கு முந்தைய நாள் மறுபடியும் போய் அவர்களை அழைக்கவில்லை. குழந்தை பிறந்த செய்தியை நான்

எதிர்மனுதாரர்களுக்கு தெரிவித்தேனா என்றால் எனது மகள் போனில் சொல்லிவிட்டார். நானோ எனது மகளோ குழந்தை பிறந்த செய்தியை எதிர்மனுதாரருக்கோ அல்லது அவரது பெற்றோர்களுக்கோ சொல்லவில்லை என்றும்,குழந்தை பிறந்த விசயமே அவர்களுக்கு தெரியாது என்றும் சொன்னால் பொய். பெயர்சூட்டும் நிகழ்ச்சிக்கு எதிர்மனுதாரர் குடும்பத்தினருக்கு சொல்லவில்லை. அதன் பிறகு மனுதாரரை அழைத்துக் கொண்டு சுமார்20 பேர் எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்றோம் என்றால் 9 பேர் சென்றோம். நாங்கள் 20 பேரும் சென்று அவர்கள் வீட்டு கதவை உடைத்து அவர்களிடம் பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. அதன் பிறகு திருச்சி சமூக நல அலுவலகத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். நகைகளை எனதுமகள் எனது வீட்டிற்கு வரும்போது எடுத்து வந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது மகளுடன் படித்த ரோஸிமேரி என்பவரை எனக்கு தெரியாது. அந்த ரோஸ்மேரி என்ற பெண் அடிக்கடித எனது மகளுக்கு துபாயிலிருக்கும்போது போன் செய்து கருவை கலைக்க சொல்லிக் கொடுத்ததன் பேரில் எனது மகள் எதிர்மனுதாரரிடம் அடிக்கடி சண்டை போட்டு வந்தார் என்றால் சரியல்ல. அந்த பெண் யாரென்றே எனக்கு தெரியாது. ரோஸிமேரிபேச்சை கேட்டுக் கொண்டு கருவை கலைக்க வேண்டுமென்று எனது மகள் வற்புறுத்தினார் என்றும், அதற்குஎதிர்மனுதாரர் குடும்பத்தினர் ஒத்துக் கொள்ளாததால் கோபித்துக் கொண்டு எனது மகள் இந்தியா வந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனதுமகளுக்கு தைராய்டு சம்பந்தமான நோய் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தைராய்டு இருப்பதால் கருவை கலைக்க வேண்டுமென்று என் மகள் சொன்னதற்கு எதிர்மனுதாரர் குடும்பத்தினர் ஒத்துக் கொள்ளாததால் எனது மகள் கோபித்துக் கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு வாங்கிய நகைகளின் நான்கு இரசீதுகளை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் கொஞ்சம் கொஞ்சமாகநகைகளை வாங்கினேன். திருமணத்தின் போது 34 பவுன் நகை போட்டதாக சொல்லிவிட்டு திருமணத்திற்கு பிறகு வாங்கியிருக்கும் நகைகளின் இரசீதுகளை தாக்கல் செய்திருக்கிறேன் என்றும், இவைகள் எல்லாம் வழக்கிற்காக சொல்லி தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. எனது மகளின் உண்மையான ஜாதகத்தை கொடுக்காமல் வேறு ஜாதகத்தை கொடுத்து ஏமாற்றிவிட்டோம் என்றால் சரியல்ல. எனதுமகள் துறையூரில் சத்யா கம்பயூட்டர்ஸ்-ல் வேலை பார்க்கிறார் என்றால் துறையூரில் சத்யா கம்ப்யூட்டர்ஸ் என்று எதுவும் இல்லை. எனது மகள் சத்யா கம்ப்யூட்டர்ஸ்-ல் வேலை பார்ப்பதாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்திலேயே சொல்லியிருக்கிறேன் என்றால் அப்படி ஒரு நிறுவனமே இல்லை. அந்த நிறுவனத்தின் பெயர் வேறு. அந்த பெயர் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் துபாயிலிருந்துவந்து தற்போது வேலை இல்லாமல் இருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மகள் எம்.சி.ஏ., படித்திருக்கிறார் என்றால் சரிதான். மாதம் ரூ.20,000/- சம்பாதிக்கும் வேலைக்குசெல்கிறார் என்றால் சரியல்ல. எனது மகள்வேலைக்கு சென்றுவருகிறார் என்றும், எதிர்மனுதாரர் தான் வேலை இல்லாமல் இருக்கிறார் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

(ஓம். சக்திவேல்)

(Sd./- A.B. Naseer Ali),
Judicial Magistrate,Musiri.